**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**O.S.No.321/2022**

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. 1 |
| பெயர் | .. சாமுண்டீஸ்வரி |
| தகப்பனார் / கணவர் | .. செல்வராஜ் |
| வயது | .. 45 |
| தொழில் | .. |
| கிராமம் | .. |
| தாலுக்கா | .. செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

பிரதிவாதி சிவக்குமாருக்கும் என் கணவருக்கும் தான் பழக்கம் என்றால் சரிதான். கொடுக்கல் வாங்கல் அனைத்தும் சிவக்குமாருக்கும் என் கணவருக்கும் தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பாண்டிற்கான தொகையையும் என் கணவர் தான் அவரிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனக்கான தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரிதான். என் கணவர் ஆசிரியராக பணிபுரிந்து தற்போது தலைமை ஆசிரியராக பணி ஓய்வு பெற்றுவிட்டார். சிவக்குமார் மருத்துவமனையில் இருந்தபோது அவரது மருத்துவ செலவிற்காக தான் அவர் என் கணவரிடம் தொகையை வாங்கினார் என்றால் சரியல்ல, குடும்ப செலவிற்காக வாங்கினார். தாவா தாக்கல் செய்வதற்கு முன்போ 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு முன்னர்

வாங்கினாரா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 மாதத்திற்கு முன்பு வாங்கினார். பிரதிவாதி வாங்கிய தொகைக்கான வட்டியை செலுத்தவில்லை. என் கணவர் வரவு செலவு கணக்கு டைரியில் பராமரிக்கிறார் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் பாண்டில் பிரதிவாதி கையொப்பம் முன்பே செய்தது போலும், அதில் உள்ள சங்கதிகள் தற்போது எழுதப்பட்டது போல் உள்ளது என்றால் சரியல்ல, அதுபற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பம் தாவா தாக்கல் செய்வதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பே போடப்பட்டது என்றும், வெற்று ஆவணத்தை பயன்படுத்தி இந்த பாண்டை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவுடன் பிரதிவாதி எங்களை வந்து சந்தித்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றாலும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவுடன் பிரதிவாதி தங்களிடம் வட்டியை மட்டும் கழித்துவிட்டு தர தயாராக இருந்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் அவர் பதில் அறிவிப்பு தரவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்றும், அதனால் வா.த.சா.ஆ.1 க்கு எந்த பிரதிபலன் இல்லை என்றாலும் சரியல்ல. நான் பொய்யாக பூர்த்தி செய்து வா.த.சா.ஆ.1 போடப்பட்டுள்ளதால், இந்த தாவா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**